19th January 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பைனன்ஸ் கமிஷன் இங்கு வந்து நேராக விசாரிப்பதற்கு இன்னும் சிலமாதங்களாகும். விசாரிப்பதற்கு முன்பு என்னென்ன அபிப்பிராயங்கள் கூறுவது என்பதை நாம் உருவாக்கி அதைத் தெரிவிக்கலாம். இப்போது அதைப்பற்றித் தெரிவிப்பதற்கில்லை.

பால் பாயிண்ட் பேனுக்கள்

* 2 **கேள்வி.—திரு. அ. பெ. தர்மலிங்கம்** *(திரு. மு. கருணாநிதி சார்பில்)* : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க அலுவலகங்களில் "பால் பாயிண்ட் பேனுக்களை" உபயோகிக்கக்கூடாதென அரசாங்கம் ஏதேனும் தடை உத்திரவு பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) and (b) : No. But it has been decided by the Government of India that signature on bills and other documents with money value should be made in ink only. The above decision of the Government of India has been communicated to all the Heads of Departments, etc. for information and guidance.

The objection to accepting signatures on documents by ball point pens is that they are apt to be smudged and fade away after some time. There is also a possibility that such signatures could be forged and altered more easily.

திரு. சா. கணேசன் : பால் பாயின்ட் பென்னுல் எழுதும் எழுத்து ஃபேடாகி விடும் என்பதற்காக மட்டும்தான் அதைத் தடை செய்திருக்கிறார்களா ? அல்லது அப்பேனுவின் உதவியால் போடுகிற அல்லது எழுதுகிற எழுத்துக்கள் உண்மையைக் கண்டு பிடிப்பதற்கு உதவியாக இல்லை என்றும் அதைத் தடை செய்திருக்கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இரண்டு காரணங்களும் உண்டு என்றுதான் விடையில் குறிப்பிட்டேன்.

விற்பனை வரி விலக்கு

* 3 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உலர்ந்த மீன் விற்பனைக்குக் கொடுத்து வந்த விற்பனை வரிச்சலுகை நிறுத்தப்பட்டதை மீண்டும் வரிச்சலுகை கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை தூத்துக்குடி ஏற்றுமதி வியாபாரிகள் சமர்ப்பித்துள்ளனரா?

(இ) ஆமெனில், அதன்மீது என்ன முடிவு செய்யப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) As the Government had already decided to restore the exemption granted on the sales of dried and salted fish, no separate action was taken on this representation.

விற்பனைவரி அதிகாரியின்மீது தாக்குதல்

* 4 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :
திரு. மீ. கலியாணசுந்தரம் : } கனம் கைத்தொழில்
திரு. செ. மாதவன் :

அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1-ம் நாள், மாதவரத்தில் உள்ள வாணிப நிலையம் ஒன்றில், விற்பனைவரி அலுவலாளர்கள் தாக்கப்பட்டனரா ?

(இ) அதன்மீது அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?.

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) and (*b*) : With reference to a complaint made, the Police investigated the case and filed a charge sheet against the 20 accused in the Court of the Sub-divisional Magistrate, Poonamallee. All the accused have been committed to Sessions Court, Chingleput.

திரு. மீ. கலியாணசுந்தரம் : தாக்கப்பட்ட அரசாங்கச் சிப்பந்திகள் யார் யார் ? அவர்களுக்கு ஏதாவது நஷ்டயீடு கொடுக்கப்பட்டதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கமர்ஷியல் டாக்சஸ் டிப்பார்ட்மெண்ட்டைச் சேர்ந்தவர்கள் நஷ்டயீடு ஒன்றும் கொடுக்கப்படவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : தாக்கியவர்கள் மீது எந்த எந்த பிரிவுகளின் கீழ்குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றது என்று அறியலாமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதெல்லாம் இப்போது கோர்ட்டில் இருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : எதிரிகள் என்று சொன்னார்கள். அவர்கள் யார் என்று தெரிந்துகொள்ளலாமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தக் கம்பெனியைச் சேர்ந்தவர்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : விற்பனை வரி அதிகாரிகள் எந்தக் காரணத்திற்காகத் தாக்கப்பட்டார்கள் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: புத்தகங்கள் எடுக்கிறபோது தாக்கப்பட்டார்கள்.